**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.233/2019**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.10.2023

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை நான் 5.8.2019 அன்று கோடாங்கிபட்டி அருகில் போலிசாரிடம் போட்டுக்கொடுத்தேன். அந்த இடத்தில் போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் இறங்கி பார்த்த போது எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் முருகேசன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். பார்வை மகஜர் அசாஆ 2.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் படம் வரைந்து கொண்டிருக்கும்போது நான் அந்த இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் அந்த சமயத்தில் மினி வேனில் வந்தேன். நான் படம் வரைந்த பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்த விபரம் எனக்குத் தெரியாது. படம் வரைந்த இடத்திற்கு அருகில் நான்கு பக்கமும் என்னனென்ன அமைந்திருக்கிறது என்று தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் எனக்கு உறவினர் கிடையாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.